# பின்னிட்டுப் பார்க்க வேண்டாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# பின்னிட்டுப் பார்க்கும்படி நிற்கக் கூட செய்யாதீர்கள். பின்னிட்டுப் பார்க்க நமக்கு எந்த நேரமும் இல்லை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# லூக்கா 9:62

அதற்கு இயேசு:
கலப்பையின்மேல் தன் கையை
வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற
எவனும் தேவனுடைய
ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன்
அல்ல என்றார்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

# செய்தி: 57-08-18 காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள்

---

63. அதன்பிறகு நான் வேறொரு ஞாபகச் சின்னத்தைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், அது ஒருநாள், ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது. அவள் நீர்பாய்ச்சலான சமபூமியில் தங்க (stay up) கூடாது என தீர்மானித்தாள், அல்லது சோதோம் கொமோராவுடைய நீர்ப்பாய்ச்சலான சமபூமியில் தங்கி யிருந்து, கூடிப்பழகும் இயல்புடையவ ளாய், அந்நாட்களில் இருந்த அந்த மற்ற பெண்களைப் போன்று ஜீவிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

64. வறண்ட தரிசு நில பூமியில் தங்கின சாராளைப் போன்று அவள் நல்ல தெரிந்து கொள்ளுதலைச் செய்யவில்லை. அவள் (சாராள்) மாத்திரமே தேவனுடைய வார்த்தையை தன்னுடைய இருதயத்தில் வைத்திருந்தாள். அவள் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படிகிறவளாகவும் மிக அருமையானவளாகவும் இருந்தாள், அவள் அவ்வளவாய், அவனை, ஆண்டவனே என்று அழைத்தாள். அங்கு தான் தேவன் இரண்டு தூதர்களோடு இறங்கி வந்து, அந்தக் கூடாரத்தில் அவர்களிடம் விஜயம் செய்தார்.

65. ஆனால், திருமதி. லோத்துவோ, அவள் மிகவும் உலகப்பிரகாரமாக ஆகி, உலகத்தின் காரியங்களை ஏற்றுக்கொண் டாள். இன்று, மிகவுமாக உலகப்பிரகார மான சிந்தையை உடையவர்களாய் ஆக முடிகிற, நமக்கு அது என்னவொரு பாடமாக இருக்கிறது. நான் மிகவும் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், இன்று

முழு சபையும் மிகவும் உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாக (worldly-minded) ஆகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது, ஒருக்கால், திருமதி. லோத்து, அவள் அங்கே போனபோது, அதைச் செய்ய கருதாமல் இருந்திருக்கலாம். அவள், "கூடிப்பழகும் இயல்புடையவளாய் இருப்பேன்" என்று நினைத்தாள். கூடிப்பழகும் இயல்புடையவர்களாய் இருப்பது எல்லாம் சரிதான், ஆனால் உலகத்தின் பழக்கவழக்கங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள் (take up).

66. நீங்கள் போகும்போது, சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவைப் போன்று செல்லுங்கள். அவர்கள் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளக் கூடாது என்று தங்களுடைய இருதயத்தில் நோக்கம் கொண்டிருந்தார்கள், எது வந்தாலும் போனாலும் காரியமில்லை. மற்ற உலகத்தார் பின்வாங்கிப் போனாலும்,

என்ன நடந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவர்கள் தங்களுடைய இருதயத்தில் நோக்கம் கொண்டிருந்தார்கள். அவர்கள் இன்று ஒரு ஞாபகச் சின்னமாக இருக்கிறார்கள்.

67. மேலும் திருமதி. லோத்து ஒரு ஞாபகச் சின்னமாக நிற்கிறாள். தேவன் அவளுக்குத் தம்முடைய கடைசி கிருபையின் செய்தியைக் கொடுத்து, அவர் அந்த தூதர்களை அங்கே அனுப்பி, ஒரு சில மணி நேரங்களில் சோதோமும் கொமோராவும் சுட்டெரிக்கப்படப் போகின்றன என்று அவர்களிடம் கூறப்பட்ட போது, இன்னுமாக, தன்னுடைய சமுதாய ஜீவியத்தை விட்டுவிட்டு, வெளியே வனாந்தரத்திற்கு, அங்கே வெளியே வனாந்தரத்தில் ஜீவித்திருந்த சாராளைப் போன்று ஜீவித்து, பகட்டற்ற பெண்மணிகளுடைய சாதாரணமான எளிய வஸ்திரங்களை உடுத்த வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டவளாய் நிற்க

அவளால் முடியாதிருந்தது. அவளுடைய கணவன் அந்தப் பட்டணத்தில் ஒரு மகத்தான மனிதனாக ஆகியிருந்தான். அவன் ஒரு நியாயாதிபதியாகவோ அல்லது பட்டணத்தின் ஒரு மேயராகவோ வாசலில் உட்கார்ந்திருந்தான். அவள் இந்த ஆடம்பரங்களை விரும்பினாள். அக்காரி யங்களை விட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவளாய் அவளால் நிற்க முடியாதிருந்தது. அவள் தன்னுடைய கணவனோடு பட்டணத்தை விட்டு வெளியே போகையில், அவள் தொடர்ந்து பின்னிட்டுப் பார்த்துக் கொண்டேயிருந்து, அவள் அதை விட்டுவிட்டு, அந்த மரணத்தின் சுபாவத்திலிருந்து தன்னை வேறுபிரித்துக்கொள்ள வேண்டியிருந்த காரணத்தினால் அழுதுகொண்டும் துக்கப் பட்டுக்கொண்டும் இருந்தாள்.

68. **"கலப்பையின் மேல் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்ப்பதற்குக் கூட திரும்புகிற மனுஷன், உழுவதற்கு தகுதி**

யுள்ளவன் அல்ல" என்று இயேசு கூறியுள் ளார். நாம் எம்மாதிரியான ஜனங்களாய் இருக்க வேண்டும்?

கலப்பையின் மேல் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்காமல் இருந்தும் கூட, ஆனால் பின்னிட்டுப் பார்க்க சற்று திரும்பி னாலும் கூட, அவன் உழுவதற்கு அவனுக்கு தகுதியும் கூட கிடையாது. ஓ, நாம் நம்முடைய கண்களையும் இருதயங்களையும் ஒருவரிடம் மாத்திரமே வைத்திருக்க வேண்டும். மற்ற ஜனங்கள் என்ன செய் தாலும், சபை என்ன செய்தாலும், அண்டை வீட்டார் என்ன செய்தாலும், மற்ற யாராவது என்ன செய்தாலும், அது ஒரு பொருட்டல்ல, உங்கள் இருதயத்தை கல்வாரியின் மேல் ஒருமுகப்படுத்தி கவனம் செலுத்துகிறவர்க ளாய் வைத்துக்கொள்ளுங்கள்.

பின்னிட்டுப் பார்க்கும்படி நிற்கக் கூட செய்யாதீர்கள். பின்னிட்டுப் பார்க்க நமக்கு எந்த நேரமும் இல்லை.

69. இந்த ஸ்திரீ. அவள் அவ்வாறு செய்த காரணத்தினால், ஜனங்கள் ஒருகாலத்தில் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்த பிறகு, பின்னிட்டுப் பார்க்கத் திரும்பின ஜனங்கள் எல்லாருக்கும் தேவன் ஒரு ஞாபகச் சின்னத்தைக் கொடுத்தார். அவள் உப்புத் தூணாக மாறினாள். இந்நாள் வரையில், அவள் அங்கே நின்று கொண்டிருக்கிறாள், அந்த ஸ்திரீ தன்னுடைய தலையைத் திருப்பினவளாய், பின்னிட்டுப் பார்த்துக் கொண்டு அங்கே நின்று கொண்டிருப்பதை அந்தப் பிரதேசத்தில் காண முடியும். அவள் அந்த பிரதேசத்திற்குள் பின்னிட்டுப் பார்க்கும்படியாக, தன்னுடைய இடது தோள்பட்டைக்குத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய இருதயம் அங்கே பின்னால் தான் இருந்தது. இருப்பினும், அது இருந்த வண்ணமாக, இதைச் செய்யும்படியாக, அவள் கட்டாயப்படுத்தப்பட்டாள்.

70. இன்று, அநேக ஜனங்கள் கிறிஸ்துவை அந்தவிதமாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் உலகத்திலிருந்து வெளியே வந்தும், அவர்கள் அதைச் செய்யும்படியாக கட்டாயப்படுத்தப்படுவது போன்று உணருகிறார்கள். அவர்கள் தொடர்ந்து ஆசையோடு ஏங்கிக்கொண்டும், இச்சித்துக் கொண்டும் இருக்கிறார்கள், அவர்கள் திரும்பி வரும் அளவுக்கு அதிக காலமில்லை (it isn't long till they're back). அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது போன்ற, தேவனுடைய கிருபையின், தேவனுடைய அன்பின் ஒரு பயங்கரமான ஞாபக சின்னங்களாக அவர்கள் - அவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது, ஞாபகச் சின்னங்கள்!

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

தேவனுடைய கோபம் பயங்கரமானது. அவருடைய அன்பு தூய்மையும் தெய்வீகமானது. அவருடைய கோபமும் அவருடைய அன்பைப் போன்றே தெய்வீகமானது. ஏனெனில் அவர் நியாயாதிபதி; அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்க வேண்டும். அவர் சட்டத்தை அளிப்பவர். தண்டனையில்லாத சட்டம் எதுவும் சட்டமல்ல. எனவே சட்டம் தண்டனையும் அளிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய பிரமாணங்களை மீறினால், அதற்கேற்ற தண்டனையை அடைய வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# லூக்கா 9:62

**அதற்கு இயேசு: கலப்பையின்மேல்**
**தன் கையை வைத்துப்**
**பின்னிட்டுப்பார்க்கிற எவனும்**
**தேவனுடைய ராஜ்யத்துக்குத்**
**தகுதியுள்ளவன் அல்ல என்றார்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 65-11-28E பனி - வெண்புறா சிறகுகள் மேல்

---

நமது சகோதரன் சற்று முன்பு பாடின வண்ணமாக, நோவாவுக்கு ஒரு அடையாளம் கொடுக்கப்பட்டது. (தேவன் அதிருப்தி கொண்டார். அவருடைய கோபத்தை இதுவுமே தடுத்து நிறுத்த முடியவில்லை. ஏனெனில் அவர், ''நீ அதை புசிக்கும் நாளில், சாகவே சாவாய்'' என்று கூறினார். நோவாவுக்கு தேவ னுடைய கண்களில் கிருபை கிடைத்தது. அவனுக்கு தேவன் கொடுத்த உத்தரவின் படியே, அவன் ஒரு பேழையை உண் டாக்கினான். அவன் அதில் பிரவேசித்து, தண்ணீரின் மேல் மிதந்தான்.

என்னால் கற்பனை செய்ய முடிகிறது... எப்படி அந்த நாட்களில் அவர்கள், ''இந்த கிழவன், மூடபக்தி கொண்டுள்ளவன், மலையின் மேல் பேழையை உண்டாக்கி, மழை வரப்போகிறது என்கிறான். ஆனால் மழை பெய்யவேயில்லை'' என்று கூறினர். ஆனால் அது...

நோவா, ''எப்படியாயினும் மழை பெய்ய போகிறது'' என்றான்.

அவன் பேழைக்குள் பிரவேசித்த நாள் எனக்குத் தெரியும். நான் நினைக்கிறேன்... எந்த நாள் என்று என் ஞாபகத்துக்கு வரவில்லை, அது மே மாதம் 17ம் தேதி என்று நினைக்கிறேன். நோவா பேழைக் குள் பிரவேசித்தான், தேவன் கதவை அடைத்தார்.

மேகங்கள் தோன்றின, மழை பெய்யத் தொடங்கினது, கால்வாய்கள் நிறைந்தன. ஆழத்திலிருந்த ஊற்றுகள் உடைந்து.

தண்ணீரை வெளியே கக்கின. ஜனங்கள் வீடுகளின் உரைகளின் மேல் ஏறினர். ஆனால் பேழையோ அப்படியே இருந்தது.

அதன் பிறகு பேழையைச் சுற்றி தண்ணீர் நிறைந்த போது, இது உயர, உயர எழும்பத் தொடங்கினது. ஜனங்கள் - பேழையின் கதவைத் தட்டி கூக்குர லிட்டனர். ஆனால் ஒரு பயனும் இல்லை. நோவாவினால் பேழையின் கதவை திறக்க முடியாது. அதை அடைத்தவர் தேவனே. எனவே, தேவன் மாத்திரமே அதை திறக்க முடியும்.

அப்படித்தான் நமது பேழையாகிய இயேசு கிறிஸ்துவும். தேவன் கல்வாரியில் நமக்காக கதவைத் திறந்தார். அவர் திறந்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக அதை அடைப்பார்.

34. பேழை மிதந்து உயரே உயரே சென்றது. இந்த பூமி அதன் வழக்கமான

சுழற்பாதையிலிருந்து விலகிக் கொண்டிருந்த போது, பேழை பூமிக்கு ஒரு மைல் உயரத்தில் இருந்திருக்கக் கூடும். பேழை சுற்றிக் கொண்டே வந்து, நாற்பது நாட்கள் இரவும் பகலும் மிதந்தது.

காற்று ஓய்ந்த போது...

தேவனுடைய கோபம் பயங்கரமானது. அவருடைய அன்பு தூய்மையும் தெய்வீகமானது. அவருடைய கோபமும் அவருடைய அன்பைப் போன்றே தெய்வீகமானது. ஏனெனில் அவர் நியாயாதிபதி; அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்க வேண்டும். அவர் சட்டத்தை அளிப்பவர். தண்டனையில்லாத சட்டம் எதுவும் சட்டமல்ல. எனவே சட்டம் தண்டனையும் அளிக்க வேண்டும். நீங்கள் தேவனுடைய பிரமாணங்களை மீறினால், அதற்கேற்ற தண்டனையை அடைய வேண்டும்.

35. நோவா அந்த பேழையில் மிதந்து கொண்டிருந்த போது, கொந்தளிப்பின் காரணமாக அவனுக்கு குமட்டலும், வாந்தியும் உண்டாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவனுடைய கோபாக்கினை தவிடு பொடியாக்கி நொறுக்கிக் கொண் டிருந்தது.. கூக்குரல்கள் எழும்பின. பிறகு அது அமைதியாகத் தொடங்கினது. நாட்கள் கடந்தன. ஒன்றும் நேரிடவில்லை. ஒருக்கால் பேழைக்குள் இருந்த மிருகங் களின் ஆகாரம் குறைவுபட்டிருக்கக் கூடும். ஒன்றுமே நேரிடவில்லை. எனவே அவன், ''என்ன நடக்கிறதென்று தெரியவில்லை. என்னால் வெளியே காண முடியவில்லை'' என்றான்.

பேழை எப்படி உண்டாக்கப்பட்டிருந்த தென்றால், நீங்கள் ஒருமுறை அதற்குள் நுழைந்துவிட்டால், அதற்கு ஒரே ஒரு ஜன்னல் மாத்திரமேயுண்டு, அதுவும் மேல் பாகத்தில் நீங்கள் பக்க வழியாய் பார்க்க

முடியாது. வேறெந்த வழியாகவும் பார்க்க முடியாது. ஆனால், நேராக மேலே மாத்திரம் பார்க்க முடியும். பேழையாகிய இயேசு கிறிஸ்துவும் அப்படித்தான் இருக்கிறார். (நீங்கள் அந்த பேழைக்குள் இருக்கும் போது, பக்கத்திலுள்ள ஆளை பார்க்க முடியாது, கிறிஸ்துவைத் தவிர வேறெதையும் நீங்கள் பார்க்க முடியாது. ஏனெனில், ஒரே ஒரு வாசல் மாத்திரமே உண்டு. அவரே இன்று காலை நாம் பேசின அந்த வாசல், நீங்கள் மேலே நோக்கிப் பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள்.

ஏனெனில், ''கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் உழுவதற்குத் தகுதியுடையவன் அல்ல (லூக். 9:62).''

36. இந்த பேழையில்... நோவா வெளிச்சத்தைக் காண முடிந்தது. ஒருக்கால் சூரிய வெளிச்சம். ஆனால் அவன் எங்கிருக்கிறான் என்று வியந்தான். பேழை

இப்பொழுதும் மிதந்து கொன்டிருந்தது. அலைகள் பேழையின் பக்கங்களில் மோதுவதை, அவனால் கேட்க முடிந்தது. ஆனால் அநேக நாட்கள் கடந்து விட்டபடியால், தண்ணீர் மட்டம் அந்நேரம் குறைந்திருக்குமென்று அவன் நிச்சயமாக அறிந்திருந்தான். எனவே, அவன் நம்பத்தகாத, துரோகியான ஒரு பறவையை வெளியே அனுப்பி அதை சோதித்துப் பார்த்தான். அது ஒரு காகம், அது திரும்பி வரவேயில்லை. ஏனெனில், தேவனுடைய பேழைக்கு வெளியே அது இன்பம் கண்டது. அது தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த ஒரு சவத்திலிருந்து மறு சவத்துக்குப் பறந்து சென்று அவைகளைத் தின்று கொண்டிருந்தது. அது பரிபூரண திருப்தி கொண்டது.

37. அநேக நாட்கள் கழித்து அவன் மறுபடியும் முயன்றான், ஏனெனில் அவன் அறிந்திருந்தான்..... தேவனுடைய கோபாக்

கினை உள்ளபோது, அவன் வெளியே வர விரும்பவில்லை. எனவே, அவன் ஒரு புறாவை அனுப்பினான். இந்த புறா வித்தியாசமான இயல்பு படைத்தது... அது ஒரு பருந்து அல்ல, இது ஒரு தோட்டி யல்ல, அது சுத்தமானவைகளையே தின்ன முடியும், தன் உள்ளங்கால் வைக்க அதற்கு இடமே கிடைக்காததால், இது திருப்தி கொண்டு பேழைக்குத் திரும்பி வந்தது. நோவா வெள்ளம் இன்னும் உள்ளது என்று கண்டு கொண்டான்.

அவன் மேலும் அநேக நாட்கள் காத்திருந்து. அந்த புறாவை மறுபடியும் அனுப்பினான். அவன், ''ஓ, தேவனே. உமது கோபம் தணிந்து விட்டதா? கர்த்தாவே, உமது கோபம் அடங்கி விட்டதா? அதெல்லாம் முடிந்து விட்டதா என்று ஜெபித்திருப்பான். அவன், வெள்ளம் வற்றியிருந்தால், இம்முறை அது வெளியிலே தங்கட்டும்'' என்றான்.

அவன் ஜெபத்துடன் அதை வெளியே அனுப்பின போது. அது தேவனால் வழி நடத்தப்பட்டு வெளியே சென்று, ஒரு ஒலிவ மரத்தின் இலையைக் கொத்திக் கொண்டு திரும்பி வந்து, அலகினால் ஜன்னலைக் கொத்தினது.

தேவன் ஒரு புறாவை அடையாளமாக உபயோகித்தார். அது திரும்பி வந்து, தண்ணீர் வடிந்து விட்டது என்றுரைத்தது. பிறகு தேவன் கதவை திறந்தார். அவர்கள் வெளியே சென்றனர். அது, ஆதியாகமம் 8:8.

# அவ்வாறே நீங்கள் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு, உலகத்தை பின்னிட்டுப் பார்க்கக் கூடாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# லூக்கா 9:62

**அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 62-05-13E அழுத்தத்தை வெளியேற்றுதல்

---

82. **நீங்கள் நல்லதை செய்ய விரும்பினால், ஒரு அடைக்கலப்பட்டணம் உண்டு என்று இன்றிரவு உங்களுக்கு அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்; அது தான் இயேசு கிறிஸ்து.**

**நீங்கள் தீமையைச் செய்ய விரும்பாமல், சத்துரு உங்களைப் பின் தொடர்ந்தால், தப்பிக்க ஒரு வழியுண்டு. அந்த தப்பித்துக் கொள்ளுதல் இயேசு கிறிஸ்துவே. நீங்கள் பிரவேசித்து உங்கள் நீராவியை வெளியேற்ற ஒரு இடம் உண்டு.**

**ஆனால் நீங்கள் பாவம் செய்ய விரும்பி, உங்களுக்கு தேவன் வேண்டாமென்றால், உங்களைப் பின் தொடரும் சத்துரு எங்காவது ஓரிடத்தில் உங்களை மேற்கொள் வான்.** உங்களுக்கு... உங்களால் கிறிஸ்து வினிடம் வர முடியாது. ஏனெனில் உங்களுக்கு வர விருப்பமில்லை.

83. இந்த மனிதன் அடைக்கல ஸ்தல மாகிய கிறிஸ்துவினிடம் வரும்போது ... பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஒரு மனிதன் அடைக்கலப்பட்டணத்துக்குள் பிரவேசித்தால், முதலாவதாக அவன் சுய சுயாதீன சித்தப்படியே அதில் பிரவேசிக்க வேண்டும். அப்படித்தான் நீங்கள் கிறிஸ்துவினிடம் வர வேண்டும்.

84. வேறொரு காரியம், நீங்கள் அதற்குள் இருக்கும் 'போது, திருப்தி யுடையவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு போதும்.... நீங்கள் நாள்

தோறும், “எனக்கு இந்த இடத்திலிருந்து வெளியே செல்லப் பிரியம், எனக்கு இங்கிருந்து வெளியே செல்ல வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் உங்களை வெளியே அனுப்பி விடுவார்கள். அவர்கள் மனப்பூர்வமாய் அந்த பட்டணத்துக்குள் வசிக்க விருப்பங் கொள்ள வேண்டும்.

85. **அவ்வாறே நீங்கள் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு, உலகத்தை பின்னிட்டுப் பார்க்கக் கூடாது.**

**“கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுடையவன் அல்ல” என்று வேதம் கூறுகிறது (லூக். 9: 62).**

அங்கு தான் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் தவறு செய்கின்

றனர். பாருங்கள், அவர்கள் உழப் போவ தாக காண்பிக்கின்றனர், ஆனால் ஒரு சிறிய காரியம் குறுக்கிட்டாலும் அவர்கள் அதை விட்டு விடுகின்றனர்.



**நினைவில் கொள்ளுங்கள், அது என்னவாயிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை; அது வேலையானாலும், அது குடும்பமானாலும், அது உங்கள் அன்பானவர்களானாலும், அது கூட பணிபுரிபவர்களானாலும், அது உங்கள் கூட்டாளியானாலும், அது என்னவாயிருந்தாலும், ஒவ்வொன்றையும் கழற்றிவிடுங்கள். "கலப்பையின் மேல் கை வைத்து, திரும்பிப் பார்க்கிறவன், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு தகுதியானவன் அல்ல".**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து



# செய்தி: 56-05-27 காதேஸ் பர்னேயாவில்

142. இன்றிரவு, நீங்கள் வியாதிப் பட்டிருப்பீர்களானால், கிறிஸ்துவை உங்கள் சுகமளிப்பவராக (Healer) ஏற்றுக் கொள்ளப்போகிறீர்களா அல்லது இல்லையா என்று நீங்கள் ஒரு தீர்மா னத்தை எடுத்தாக வேண்டும். அதினோடு நீங்கள், முடிவெடுக்கலாமா, வேண்டாமா என்றோ' அல்லது 'மந்தமாகவோ இருக்க முடியாது'. "நான் அவரை விசுவாசிக்

கிறேன்" அல்லது நான் அவரை விசுவா சிக்கவில்லை " என்று ஏதாவது ஒன்றை நீங்கள் சொல்லியே ஆக வேண்டும். "நான் சுகமடையப்போகிறேன்" அல்லது "நான் சுகமடைவதற்கான போதுமான விசுவாசம் என்னிடத்தில் இல்லை" என்று உங்கள் தீர்மானத்தை நீங்கள் எடுத்தாக வேண்டும்.

143. இன்றிரவு, நீங்கள் ஒரு பாவியாக இருப்பீர்களானால், நீங்கள் ஒரு தீர்மா னத்தை எடுத்தாக வேண்டும். நீங்கள் காதேஸ்-பர்னேயாவில் இருக்கிறீர்கள், நீங்கள் நியாயத்தீர்ப்பின் சிங்காசனம் இருக்கும் இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

144. அந்த சிறிய ஊற்றுகளும், அல்லது சபைகளும் எதை பிரதிநிதிப் படுத்துகிறது? தேவனுடைய வீட்டில் எப்பொழுதும் போல நியாயத்தீர்ப்பு துவங்குகிறது... இயேசு அவ்விதமாக கூறியிருக்கிறார்; வேதாகமமும் அவ்வித மாக கூறுகிறது. நியாயத்தீர்ப்பு தேவனு

டைய வீட்டில் துவங்குகிறது; நாம் இன்றிரவு தேவனுடைய வீட்டில் இருக்கிறோம். எனவே நீங்கள் உங்கள் தீர்மானத்தை எடுத்தாக வேண்டும்.

145. இன்றிரவு நீங்கள் கிறிஸ்துவண்டை வரப்போகிறீர்களா அல்லது அவரை நீங்கள் புறக்கணிக்கப்போகிறீர்களா என்று உங்கள் தீர்மானத்தை நீங்கள் எடுத்தாக வேண்டும். இங்கிருக்கிற ஒவ்வொரு பாவியும் சரியாக இப்பொழுதே அந்த தீர்மானத்தை எடுத்தாக வேண்டும்.

146. ஒன்று நீங்கள் உள்ளே வரும்போது இருந்ததைக் காட்டிலும் திரும்பிப் போகும் போது ஒரு சிறந்த புருஷனாகவோ அல்லது ஸ்திரீயாகவோ அந்த கதவு வழியாக வெளியே செல்வீர்கள் அல்லது நீங்கள் உள்ளே வரும்போது இருந்ததைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலையில் வெளியே திரும்பி

செல்வீர்கள். நீங்கள் இந்த இரண்டுக்கும் நடுவில் நிற்க முடியாது, நீங்கள் அதை (ஒரு முடிவை) செய்தாக வேண்டும்.

147. அது என்னுடைய இருதயத்தில் இருந்தது; எப்படியெனில் என்னுடைய இருதயத்தில் இருக்கிற இது, இப்பொழுது உங்களுடைய கரங்களில் கொடுக்கப் பட்டிருக்கிறது. உங்களுடைய தீர்மா னத்தை நீங்கள் எடுத்தாக வேண்டும். நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்தே ஆகவேண்டும். ஒருவேளை நீங்கள் ஒரு நல்ல சபை அங்கத்தினராக இருந்திருக்க லாம். ஒரு வேளை உங்களுக்கு தேவன் அதிகமாக வேண்டும் என்று எப்பொழுதும் நீங்கள் வாஞ்சித்திருக்கலாம். மேலும் தேவனுக்கென்று ஏதாவது செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டும் இருக்க லாம். ஞாபகம் கொள்ளுங்கள், ஒருமுறை மட்டுமே நீங்கள் மானிடர்களாய் பிறக் கிறீர்கள் மற்றும் அந்த ஒரு முறைதான் நீங்கள் மானிடர்களாய் இருக்கக்கூடிய

நேரமாய் இருக்கிறது. எனவே நீங்கள் உங்கள் தீர்மானத்தை எடுக்கக்கூடிய நேரம் இதுவாக இருக்கக்கூடும், எப்படியெனில் ஒன்று நீங்கள் தேவனோடு கூட தொடர்ந்து போகவேண்டும் அல்லது நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கேயே தரித்திருக்க வேண்டியதுதான்.

148. இன்றிரவு நீங்கள் உங்கள் தீர்மானத்தை எடுத்தாக வேண்டும். அது என்னவாயிருந்தாலும், நீங்கள் அவை ஒவ்வொன்றையும் கழற்றி, தூக்கியெறிய வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

**நினைவில் கொள்ளுங்கள், அது என்னவாயிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை; அது வேலையா னாலும், அது குடும்பமானாலும், அது உங்கள் அன்பானவர்களானாலும், அது கூட பணிபுரிபவர்களானாலும், அது உங்கள் கூட்டாளியானாலும், அது என்ன**

**வாயிருந்தாலும், ஒவ்வொன்றையும் கழற்றி விடுங்கள். “கலப்பையின் மேல் கை வைத்து, திரும்பிப் பார்க்கிறவன், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு தகுதியானவன் அல்ல”.**

“பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விடுங்கள். அதற்கு அர்த்தம் என்ன? பாரமான யாவற்றையும் மற்றும் நம்மை மிக சுலபமாக ஒடுக்குகிற அவிசுவாசத்தையும் தள்ளி, நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை பொறுமையோடே ஓடக்கடவோம்.



**இந்தக் காரியங்களை விசுவாசிக்காத அவிசுவாசிகளின் கூட்டத்தில் நீங்கள் கட்டப்பட்டிருக்கும் வரை, உங்களால் ஒருபோதும் காணவே முடியாது. நீங்கள் வௌவாலைப்போல குருடாயிருப்பீர்கள். அப்படிப்பட்ட எல்லாக் காரியத்திலிருந்தும் உங்களை துண்டித்துக் கொள்ளுங்கள்; அது தாயாயிருந்தாலும், தகப்பனாயிருந்தாலும், சகோதரியாயிருந்தாலும், ஸ்தாபனமாயிருந்தாலும் அல்லது அது வேறு என்னவாயிருந்தாலும் சரி. "தன்னைத்தான் வெறுத்து என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. கலப்பையின் மேல் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் உழவுக்குப் பாத்திரனல்ல."**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து



# செய்தி: 63-12-16 நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்

169 இங்கேயோ சாஸ்திரிகள் தங்களுடைய பரலோக வெளிச்சத்தை கவனித்துக்கொண்டே பயணித்து வந்து, "நான் எருசலேமை அடையும்போது,

நமக்கு மேலே இருந்து நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிற இந்த பரலோக இரகசியமான தெய்வீக ஒளி என்ன என்பதை அவர்கள் எனக்குச் சொல்லுவார் கள்" என்று கூறிக்கொண்டனர். அவர்கள் தெருக்களில் இங்கும் அங்கும் சென்று, "அவர் எங்கே? யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கிழக்கில் கண்டோம். எனவே நாங்கள் அவரைத் தொழுது கொள்ள வந்திருக்கிறோம். நாங்கள் பொன்னையும், தூபவர்க்கத் தையும் வைத்துள்ளோம், நாங்கள் எல்லா வற்றையும் அவருக்காக வைத்துள்ளோம். அவர் எங்கே? அவர் எங்கே ?

170 அவர்கள், "யாரை எங்கே என்று கேட்கிறீர்கள்? என்ன?" என்றனர். அது அந்தவிதமாகவே இன்றைக்கும் உள்ளது. அவர்கள், அதைப் போன்ற ஒரு காரியம் இன்றைக்கு சம்பவிக்கவில்லையே" என்று கூறினர். சூரியன் அஸ்தமித்தபோது,

நாங்கள் ஒரு இரகசியமான தெய்வீக ஒளியினைக் கண்டோம்." "நான் அதை ஒருபோதும் கண்டதில்லையே." "கோபுரத் தின் மேலுள்ள ஜாமக்காரனைக் கூப்பிடுங் கள்." "நீ அந்தவிதமான ஒரு இரகசியமான் ஒளியைக் கண்டாயா?" "நீங்கள் என்னக் கூறுகிறீர்கள்?" "நீ ஏதாவது இரகசியமான தெய்வீக ஒளியினைப்... பார்த்தாயா?"

171 "இல்லையே! உங்களுக்கு என்ன நேர்ந்தது?" பாருங்கள், அவர்கள் அதற்கான பதிலை உடையவர்களாயிருக்க வில்லை.

172 இன்றைக்கு அவர்கள் அதைப் பெற்றிருக்கவில்லையே! இந்தக் காரியங் கள் என்ன என்பதை அவர்கள் அறிந் திருக்கவில்லை, அவர்கள் அங்கு அதை அறிந்திருக்க வேண்டும், அங்கிருந்த பெரிய சபைகளின் தலைவர்கள் இந்தக் காரியங்களைக் குறித்து எச்சரிக்கையா யிருக்கும்படிக்கு அவைகளை அறிந்திருக்க

வேண்டும். ஆனால் தேவன் எப்பொழுதுமே சிறுபான்மையினரிடமே கிரியை செய்கிறார், அது மிகவும் எளிமையாயிருப்பதால், அது அவர்களுக்கு மேலாக கடந்து சென்று விடுகிறது. அவர்களோ அதை அறிந்து கொள்வதில்லை. ஆனால் அதே சமயத்தில் அவர் தம்முடைய வார்த்தையை அதைப் போன்றே நிறைவேற்றுகிறார். அதுதான். நாம் இந்தப் பெரிய காரியங்களில் சிக்கிக்கொண்டிருக்கிறபடியால், நம்மால் அசைய முடியவில்லை. (தேவனே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற வேளையைக் காணும்படிக்கு எங்களை அந்தக் காரியங்களிலிருந்து கட்டவிழ்த்து விடுவித்தருளும்) தேவன் ஒரு சொப்பனத்தின் மூலமாக மீண்டும் கிரியை செய்ய வேண்டுமானால், அவரால் இதை உங்களுக்கு வெளிப்படுத்த முடியும். நிச்சயமாகவே, அவரால் முடியும். நாம் கடைசி

நாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள்.

173 அவர்கள் அந்த மர்ம ஒளியைக் குறித்த பதிலை உடையவர்களாயிருக்க வில்லை, அவர்கள் தலைமை அலுவலகத் திலும் அதற்கு பதிலைப் பெற்றிருக்க வில்லை . அவர்கள் இன்றைக்கும் பதிலை உடையவர்களாயிருக்கவில்லை. ஆகை யால் அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டுவரும்படிக் கூறினர். அதுவே ஆலோசனையாயிருந்தது. எனவே அவர்கள், "நாம் தேவனுடைய வார்த்தை யில் நோக்கிப் பார்த்து, இந்தக் காரியங்கள் எங்கேயிருக்கின்றன என்பதைக் கண்டறி வோமாக," என்றுக் கூறினர். அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வரும்படிக் கூறினபோது, இன்றுள்ள அநேக ஜனங்களைக் காட்டிலும் சாஸ்திரி கள் புத்திசாலிகளாயிருந்தனர். எனவே அவர்கள் அதற்கான பதிலைப் பெற்றிருக்க

வில்லையென்றும், அதைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லையென்றும் சாஸ் திரிகள் தேவனுடைய வார்த்தையின்படி கண்டு கொண்டனர். ஆமென். அது அந்தப் பட்டணத்தில் இருக்கவில்லையென்றும், அது அந்த இடமாயும் கூட இருக்க வில்லையென்றும் அவர்கள் கண்டு கொண்டனர். அவர் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறக்க வேண்டியதாயிருந் தது. ஆமென். அதுவே மிகச் சிறியதாயும், அவை எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகத் தாழ்வானதாயும், மிகச் சிறிய இடமாயும் இருக்க வேண்டுமே தவிர, தன்னைப் பெரிதாக பாவித்துக்கொள்ளும் இடமல்ல. சாஸ்திரிகளோ அதை துரிதமாகவே கண்டு கொண்டனர். அவர்கள் அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லையென்றும், அதைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை யென்றும் தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தினது. எனவே அவர்கள் அந்த குழப்பத்திலிருந்து வெளியேறினர்.

ஆகையால், அவர்கள் அதை விட்டுச் சென்றனர். அல்லேலூயா, அவர்களுக்காக அவர்கள் அதைவிட்டுச் சென்றனர்.

174 அவர்கள் அந்தக் குழப்பத்தை விட்டு வெளியேறினவுடனே, இயற்கைக்கு மேம்பட்டது மீண்டும் தோன்றினது. அங்குதான் காரியமே உள்ளது. அவர்கள் அந்தக் காரியங்களிலிருந்து விடுவித்துக் கொண்டப் பிறகே அவ்வாறு தோன்றினது. அவர்கள் அங்கிருந்த அந்த கதம்ப கூளத்தைவிட்டு வெளியேறின பிறகே, அந்த பெரிய தலைமை அலுவலகம் இருந்த இடத்தில் வீண் சந்தடியும், வாக்குவாதமும் இருந்தது. எல்லா பெரிய பிரதான ஆசாரியர்களும், தெய்வீக பாண் டித்தியம் பெற்றவர்களும், எல்லோரும் தங்களுடைய தத்துவப் படிப்பு பட்டங் களோடும், தங்களுடைய மகத்தான, பெரிய உயரமான தலைப்பாகையுடன் சுற்றி நடந்துகொண்டிருந்தனர். அவர்க ளால் அதற்கான நட்சத்திரத்தைப் பார்த்

திருக்க முடியாது. அந்தவிதமாக நடந்து கொண்டிருந்தனர். அப்படிப்பட்டக் காரியங்கள் ஏராளமாக ஜனங்களை குருடாக்குகிறது, பெரிய பெயர்கள்; பெரிய மனிதர்களாய் நடந்து கொண் டிருத்தல் போன்றவையேயாகும்.

175 அவர்களில் அநேகர், "அதைப் போன்ற ஒரு காரியமேக் கிடையாது. நானூறு வருடங்களாக, நாங்கள் அப்படிப் பட்ட ஒரு காரியத்தையும் கேள்விப் பட்டதேயில்லை. இந்த பைத்தியக்கார ஜனங்களோடு உள்ள காரியம் தான் என்ன? எனவே அவர்களுக்கு சொந்த மான இந்தியாவிற்கே அவர்களை திருப்பி அனுப்பிவிடுங்கள்" என்றனர்.

176 "என்ன? தேவனுடைய வார்த்தை , அதைக் குறித்து என்ன? அவர், "யூதேயா விலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்க ளில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்தி

லிருந்து புறப்படுவார். ஆனால் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு..." கூறியுள்ளாரே. அப்பொழுது அவர்களோ, "ஓ, நாங்கள் தவறான இடத்தில் இருக்கிறோம்" என்றனர். "நாங்கள் இந்தவிதமான எந்த காரியத்துடன் சேரமாட்டோம்."

177 ஆகையால், அவர்கள் தங்களுடைய ஒட்டகங்களைத் திருப்பிக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டனர். தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக. அங்கிருந்து அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் அங்கிருந்து வெளியேறினவுடனே, அந்த ஒளி மீண்டும் தோன்றிற்று. இயற்கைக்கு மேம்பட்டது மறுபடியும் அவர்களிடத்தில் அசையத் துவங்கினது. ஓ, என்னே! சாஸ்திரிகள் அவர்களுடைய முறைமைகளிலிருந்து வெளியேறினவுடனே, அப்பொழுது அவர்கள் இயற்கைக்கு மேம்பட்டதைப் பின்தொடரத் துவங்கினர். ஆகையால் அவர்கள் அதிலிருந்து வெளி

யேறினவுடனே, பரலோகத்திலிருந்து இயற்கைக்கு மேம்பட்ட ஒளி அவர் களுக்கு மீண்டும் தோன்றினது.

178 **இந்தக் காரியங்களை விசுவாசிக் காத அவிசுவாசிகளின் கூட்டத்தில் நீங்கள் கட்டப்பட்டிருக்கும் வரை, உங்களால் ஒருபோதும் காணவே முடியாது. நீங்கள் வெளவாலைப்போல குருடாயிருப்பீர்கள். அப்படிப்பட்ட எல்லாக் காரியத்திலிருந்தும் உங்களை துண்டித்துக் கொள்ளுங்கள்; அது தாயாயிருந்தாலும், தகப்பனாயிருந்தாலும், சகோதரியாயிருந்தாலும், ஸ்தாபனமாயிருந் தாலும் அல்லது அது வேறு என்னவாயிருந் தாலும் சரி. "தன்னைத்தான் வெறுத்து என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. கலப்பையின் மேல் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் உழவுக்குப் பாத்திரனல்ல."** சகோதரனே, சகோதரியே, நான் இதை உங்களுக்குக் கூறட்டும், ஒரு அசலான, உண்மையான கிறிஸ்தவ வெளிச்சம் இன்றிரவு

பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதேயாகும். எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள் ளுங்கள். அவர் வார்த்தையாயிருக்கிறார். அவர் எப்பொழுதுமே வார்த்தையாயிருக் கிறார். தேவனுடைய வார்த்தை பரிபூரண மானதாயுள்ளது.



# பின்னிட்டுப் பார்க்க வேண்டாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# லூக்கா 9:62

அதற்கு இயேசு: கலப்பையின்மேல்
தன் கையை வைத்துப்
பின்னிட்டுப்பார்க்கிற எவனும்
தேவனுடைய ராஜ்யத்துக்குத்
தகுதியுள்ளவன் அல்ல என்றார்.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: **ஆபிரகாம், 61-0211**

---

64. அரைகுறையாக இருப்பதால் என்ன பயன்? ஒரு வெதுவெதுப்பான சபையைக் கொண்டிருப்பதால் என்ன பயன்? அதிதீவிர சூடாகவோ அல்லது-அல்லது மிக அதிக கடுங்குளிராகவோ இருங்கள். நீங்கள் பெந்தெகோஸ்தேயினராக ஜீவித்தாலன்றி, பெந்தெகோஸ்தேயினர் என்று உரிமை கோர வேண்டாம். நீங்கள் வாழ்வதைக் காட்டிலும் அதிக உயரம் குதிக்க வேண்டாம். அது சரியே. அது ஒரு அவமானமாக உள்ளது; அது அவர்களில் மற்றவர்கள் மேலும் அவமானத்தைக் கொண்டுவருகிறது. அவிசுவாசிகளுக்கு தீங்காக இருப்பது அதிகமாக கள்ளச் சாராயக் கடைகள் (bootleg joint) அல்ல; ஏதோவொன்றைக்

கொண்டிருப்பதாக உரிமைகோரிவிட்டு, உலகத்தைப் போன்று நடந்து கொள்ளும் ஜனங்கள் தான், அவர்கள் தான் இடற்கல்லாக (stumbling block) இருக்கிறார்கள். தேவனுக்காக கொழுந்துவிட்டு எரிகிற நிலையில் இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிற ஒரு சபையானது, நாம் அவர்களுடைய ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்ற காரணத்தினால், இங்கும் அங்கும் சென்று, வருகிற அதே தேவனுடைய ஆவியைக் கூப்பிட்டுக்கொண்டு, அது-அது மாயமான விஷயம் என்றும், அது மாற்றார் உளம் அறியும் சிறப்பாற்றல் (telepathy) என்றும், அது இது, அது, அல்லது மற்ற எல்லாம் என்றும் கூறுகிறார்கள். உங்களுக்கு அவமானம். உங்களுடைய பாவமுள்ள ஆத்துமாக்களின் மேல் தேவன் இரக்கமுள்ளவராயிருப்பாராக. நீங்கள் அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே அதைச் சந்திப்பீர்கள், அநேகமாக நீங்கள் நியாயத்தீர்ப்புக்கு வருவதற்கு முன்பாக; அது

சரியே, ஏனென்றால் தேவன் அதை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

ஓ, நாம் ஒரு மிகவும் பயங்கரமான ஒரு நேரத்தில் இருக்கிறோம், நண்பர்களே. ஓ, உலகமானது மூழ்கிக் கொண்டிருக்கிறது, தேசம் மரித்துக் கொண்டிருக்கிறது.

*தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேலோ விழித்தெழுகிறது,*

*தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்கள்;*

*புறஜாதியார் நாட்கள் எண்ணப்படுகிறது,*

*இடுக்கண்கள் பாரப்படுத்துகின்றன;*

*ஓ, சிதறப்பட்டோரே, உங்கள் சொந்தத்துக்கு திரும்புங்கள்.*

*மீட்பின் நாள் நெருங்குகிறது,*

*மனிதரின் இருதயங்கள் பயத்தினால் சோர்கின்றன;*

*தேவனுடைய ஆவியினால் நிறைந்து,*

*உங்கள் தீவட்டிகளின் திரி கத்தரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும்* (trimmed), *துடைக்கப்பட்டதாகவும் இருக்க,*

*மேலே நோக்குங்கள்! உங்கள் மீட்பு சமீபமாயுள்ளது.*

ஓ, நாம் என்னவொரு நாளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பவுல் இந்நாளில் வாழ்ந்திருப்பான் என்றால் எப்படியிருக்கும்? பெந்தெகோஸ்தே இந்த நிலையில் இருப்பதைக் காணும்படியாக, பரிசுத்த பேதுரு இந்த நாளில் ஜீவித்திருந்தால் எப்படியிருக்கும்? அவன் உங்களை உலுக்கியிருப்பான்; நிச்சயமாக அவன் செய்திருப்பான், ஏனென்றால் அவன் தனக்குள் பரிசுத்த ஆவியை உடையவனாய் இருந்தான். அவன் நிச்சயமாகவே அதைச் செய்திருப்பான்.

65. இப்பொழுது, கவனியுங்கள், அந்த ஜெயங்கொள்கிறவர்களுக்கு தேவன் எதை

வாக்குப்பண்ணினார் என்பதையும், ஜெயங்கொள்பவர்களுக்கு தேவன் என்ன செய்தார் என்பதையும் நான் காண்பிக்க விரும்புகிறேன். வெளியே அனுப்புவதற்கு 15 நிமிட நேரம் தான் இருக்கிறது. தேவன் என்ன செய்தார் என்பதைப் பார்ப்போம். சரியாக அங்கே ஆபிரகாம் அதை அடையாளம் கண்டுகொண்ட போது, "ஆமாம், அது தேவன் தான்" என்று சொல்லி, அவரை ஏலோகிம் என்று அழைத்தான், என் ஆண்டவரே என்று தான் (அழைத்தான்), என் ஆண்டவன்மார்களே என்று அழைக்கவில்லை, என் ஆண்டவரே என்று தான் அழைத்தான். "என் ஆண்டவரே" என்று கூறினான். பெரிய எழுத்து ஆ-ண்-ட-வ-ரே. அவன் அவரை எவ்வாறு அழைத்தான் என்பதைக் கவனியுங்கள். அவன் அவரை அடையாளம் கண்டுகொண்டு, அது என்னவென்று அறிந்துகொண்ட போது, அவன் அநேக, அநேக ஜனங்களின் இரக்கத்திற்காக விண்ணப்பம் பண்ணினான், கடைசியாக

ஐம்பது பேரிலிருந்து பத்து பேர் வரை சென்றான், இருப்பினும் அவரால் அவ்வளவு பேர்களை சோதோமில் கண்டுபிடிக்க முடியாதிருந்தது, அல்லது அவர் மன்னித்து விட்டிருப்பார். ஆனால் அங்கே கீழேயிருந்த எல்லா சபைகளிலும் அவரால் அவ்வளவு பேரை கண்டுபிடிக்க முடியாதிருந்தது. அங்கே ஐந்தோ, அல்லது பத்து நேர்மையான ஜனமும் இருக்க முடியவில்லை; அவர் மூன்று பேர்களை மாத்திரமே வெளியே கொண்டு வந்தார்: நான்கு பேர் இருந்தார்கள், அவர்களில் ஒருத்தி திரும்பிப் பார்த்தாள், அவள் பின்னிட்டுப் பார்த்தாள்: அதுதான் அவனுடைய (லோத்தினுடைய) மனைவி. அவளுடைய அருமையான ஹாலிவுட் காரியங்களை விட்டும், அவளுடைய அருமையான இடங்களை விட்டும் போக அவளுக்கு விருப்பமில்லாதிருந்தது, அது உங்களுக்குத் தெரியும். ஆகையால் அவள் ஒரு உப்புத் தூணாக மாறினாள்.

66. பின்னிட்டுப் பார்க்க வேண்டாம். “கலப்பையின்மேல் தன் கையை வைத்துப்

பின்னிட்டுப் பார்க்க திரும்புகிறவன் உழுவதற்குத் தகுதியுள்ளவன் அல்ல.” சகோதரனே, அதுதான் இந்தச் சபையில் உள்ளது. நீங்கள் கலப்பையின்மேல் உங்கள் கைகளை வைத்து, உங்களை நீங்களே பரிசுத்த ஆவியால் நிறைந்த பெந்தெகோஸ்தேகாரன் என்று அழைத்துக் கொண்டீர்கள்; உலகத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதையும், உலகத்தைப் போல நடந்துகொள்வதையும், உலகத்தைப் போன்று உங்களை மினுமினுப்பாக்குவதையும், மற்றும் இந்தவிதமான காரியங்கள் எல்லாவற்றையும், உலகத்தின் காரியங்களைக் கொண்டிருப்பதையும், ஜெபக் கூட்டத்திற்கு வருவதற்குப் பதிலாக வீட்டிலே தங்கி தொலைக்காட்சி பார்ப்பதையும் நிறுத்தி விடுங்கள். பாவிகள் பீடத்திற்கு வருகையில், வரும்படியாக எவரிடமிருந்தும் ஒருபோதும் ஒரு அசைவும் இல்லை, இப்போதெல்லாம் ஆர்வமே இல்லாதிருக்கிறது.

நான் உங்களுக்கு ஒரு சிறு எச்சரிப்பை விடுக்கட்டும், எசேக்கியேல் 9வது அதிகாரத்தில், வேதாகமம் இவ்வாறு

கூறுகிறது, பரிசுத்த ஆவியை உடைய அடையாளம் போடுபவனிடம், “நீ நகரத்தை உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சுவிட்டழுகிறவர்கள் மேல் அடையாளம் போடு” என்றார். எத்தனை பேர் எப்பொழுதாவது அதை வாசித்திருக்கிறீர்கள்? நிச்சயமாக. அவர்களைத் தவிர வேறு யாரையும் அடையாளம் இடாதே. உங்கள் விரல்களால் எண்ணிப்பார்த்து, ஒரு எடுத்துக்காட்டாக அவர்களை என்னிடம் தாருங்கள் பார்க்கலாம், இந்தப் பட்டணத்தில் செய்யப்பட்ட அருவருப்புகளினிமித்தமாக இரவும் பகலும் பெருமூச்சுவிட்டழுகிற எத்தனை பேரை இந்தக் கட்டிடத்தில் இருக்கிற யாராவது ஒருவர் காட்ட முடியும்? நான் ஒரு விரலையும் காணவில்லை. “நகரத்தில் செய்யப்படுகிற அருவருப்புகளினிமித்தமாக பெருமூச்சுவிட்டழுகிறவர்கள் மேல் மாத்திரம் முத்திரை போடு.” அவர்களில் ஏராளமானோர் அதற்கு விரோதமாக பிரசங்கம் பண்ணவும் கூட பயப்படுகிறார்கள். அவர்களில் நிறைய

பேருக்கு பயம் தான். கோழியின் மார்பெலும்புக்குப் (wishbone) பதிலாக முதுகெலும்பு (backbone - தைரியம்) உடைய மனிதர்களை தேவன் நமக்குத் தருவாராக. ஆம், ஐயா. வேறொரு யோவான்ஸ்நானகனை நமக்குத் தருவாராக. அவனை அனுப்பி, அவனைப் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணுவாராக, அது எதையும் அப்பட்டமாகவும், வெளிப்படையாகவும் கூறப் பயப்படாது (not pull any punches), ஆனால் அவன் வார்த்தையோடு தரித்திருப்பான். அவன் வார்த்தையோடு தரித்திருந்தால், பயப்பட மாட்டான். தேவன் தம்முடைய வார்த்தைக்கு ஆதரவு கொடுப்பார்.

நான் எல்லாவிதமான நெருக்கமான இடங்களிலும் வந்திருக்கிறேன், அங்கே பிசாசுகளும் மற்ற எல்லாமே எழும்பிக் கொண்டிருக்கும். அவர்கள் குருடாக அடிக்கப்பட்டும், அடித்து வீழ்த்தப்பட்டதையும் மற்ற எல்லாவற்றையுமே கண்டிருக்கிறேன். பயப்படாதீர்கள்; சரியாக

அங்கே வார்த்தையிலேயே தரித்திருந்து, தேவன் என்ன செய்கிறார் என்று கவனியுங்கள். நீங்கள் தேவனோடு சரியாகத்தான் இருக்கிறீர்களா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அந்த வார்த்தையோடு தரித்திருந்து, என்ன சம்பவிக்கிறது என்று கவனியுங்கள்.

★★★★★

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**



*How we should love Him, and let everything else be second!*

*Everything, even your home, even your family, even everything, even all your people, everything else, is secondary.*



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## லூக்கா 9:62

அதற்கு இயேசு:
கலப்பையின்மேல் தன் கையை
வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற
எவனும் தேவனுடைய
ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன்
அல்ல என்றார்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: **54-1219M - Divine Healing**

---

**212 Oh, I'm so glad I have the promise of God, so infallible, that He went to hell to witness to it. The same God promised me I'd be there with everlasting Life, because I accepted His Son, Christ Jesus, and believe every word He said to be the Truth. Just got to be there! Oh, my! What a wonderful thing!**

213 How in love we should be with Him, that lovely, infallible, Holy One of God!

How we should love Him, and let everything else be second!

Everything, even your home, even your family, even everything, even all your people, everything else, is secondary.

"He that will not forsake father, mother, sister, brother, husband, wife, children, or home, whatever it is, and follow after Me, is not worthy to be

**called Mine. And he that will put his hand to the plow and even turn to look back, is not worthy of plowing."**

**214 Give me Oil in my lamp, Lord. O God, just fill me over and over. Vaccinate me from the things of the world. May I be immune from all ungodly things, is what I want. Let Your Holy Spirit come to me, and make me immune from all the things of the world.**

**215 I want to see Jesus. I want to see Jesus. Don't you? That's right. Jesus, my Saviour,**

**so true! But when I reach that strand on the far away Land, arriving over there in a new Country, knowing nobody, then I want to see Jesus. I know I'll have a Friend There. Don't you? Then Jesus will show me mama, He'll show me my loved ones, and all my loved ones around me then. Hum!**

54-1219M - Divine Healing

இப்பொழுது, சகோதரனே, நாம் அவனுடைய எல்லையை விட்டு முழுவதுமாக திரும்பி வந்து விடுவோம்; நாம் தேவனிடம் திரும்புவோம்; பீடத்தண்டை திரும்பி வருவோம்; இடித்துப்போட்ட பலிபீடத்தை திரும்ப கட்டுவோம். உங்கள் வீட்டைக் கட்டுங்கள். மேஜையை விட்டு சீட்டுக்கட்டுகளையும் (cards), பழைய காதல் கதைப் புத்தகங்கள் எல்லாவற்றையும் எடுத்துப்போடுங்கள். **வேதாகமத்தைத் திறந்து, வேதத்தை வாசித்து ஜெபியுங்கள். வெறுமனே முழங்கால்படியிட்டு, 'என்னுடைய குடும்பத்தையும், மேரியையும், ஜோவையும், ஜானையும், அவர்கள் யாவரையும் ஆசீர்வதியும்' என்று கூறிவிட்டு, படுக்கைக்குப் போய் விட வேண்டாம். இல்லை, ஐயா. அங்கேயே தேவனோடு தரித்திருங்கள். ஓ, என்னே.**



செய்தி:
எதிர்பார்த்தல்கள்,
61–0308, பத்தி
எண் 80

சகோ.வில்லியம்
பிரன்ஹாம்

இயேசு ஒருபோதும் அவருடைய ஜனங்களிடத்தில், ஒரு ஜெபத்தைச் சொல்லுங்கள் என்று கூறவில்லை; “ஜெபம் பண்ணுங்கள்” என்றே கூறினார்.

செய்தி: பெர்கமு சபையின் காலம், 60–1207, பத்தி எண் 264

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



Only believe, Only believe
All things are possible,
Only believe.



www.thefinish.in